# இஸ்ரவேலர்களின் வரலாறு பாடம் - 2

இஸ்ரவேலின் வரலாற்றில் நடந்தது என்ன? நடந்துகொண்டிருப்பது என்ன? நடக்கபோவது என்ன? என்பவைகளை இப்பாடத்தின் மூலம் நாம் சற்று சுருக்கமாக கற்றுக்கொள்ள இருக்கின்றோம். இன்றைக்கு கடைசி அத்தியாயத்திலே, கடைசி பக்கங்களுக்கு நாம் வந்திருக்கின்றோம் என்று சொன்னால் அது மிகையாகாது.

உலகத்தில் நடைபெற்ற சம்பவங்களெல்லாம் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாகவே நடைபெற்றுள்ளது. தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாகவே ராஜ்யங்கள் தோன்றியிருக்கின்றன. தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாகவே ராஜ்யங்கள் விழுந்திருக்கின்றன. வேதத்தில் கூறப்பட்டதின்படியே ராஜாக்கள் தோன்றினார்கள், வசனத்தின் நிறைவேறுதலாகவே இராஜாக்கள் விழுந்திருக்கின்றனர்.

நம்முடைய பரிசுத்த வேதாகமத்திலே மூன்றில் ஒருபகுதி தீர்க்கதரிசன பகுதியாகும். 33% தீர்க்கதரிசன பகுதியாக இருக்கின்றது. தீர்க்கதரிசனங்களை நம்பாதவன், வேதத்தில் 3ல் ஒரு பகுதியை அறியாதவனாகவே காணப்படுவான். தீர்க்கதரிசனங்கள் எனக்கு விளங்கவில்லை என்று கூறுகிறவனுக்கு வேதத்தில் மூன்றில் ஒரு பகுதி விளங்காததாகவே இருக்கின்றது.

பிரசங்கியாரோ, போதகரோ அல்லது விசுவாசியோ, தீர்க்கதரிசன பகுதிகளை ஒதுக்கி வைத்துவிடுவார்களானால் வேதத்தில் மூன்றில் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்துவிட்டார்கள் என்றே அர்த்தமாகும். நேற்றைய தீர்க்கதரிசனம் இன்றைய செய்தியாக மாறிக்கொண்டிருக்கிறது.

உலக வரலாற்றுப் பாடத்தை ‘History’ என்று சொல்லுவோம். பள்ளிகளிலே, கல்லூரிகளிலே நடந்து முடிந்த வரலாற்றை “History”யாக படிக்கிறார்கள். History என்றால் (It is His story) என்பதாகும். தேவனே இந்த உலகத்தின் தொடக்கமாக, ஓட்டமாக, அந்தமாக இருக்கின்றார்.

ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் படைத்திருக்கிறார் என்றால் இந்த தேவன் ஆதிக்கு முன்பாகவே இருந்திருக்கின்றார். ஆதியே தேவனில்தான் ஆரம்பமாகின்றது.

வேதத்திலுள்ள தீர்க்கதரிசன பகுதிகளை நாம் மூன்றுவிதமாக படிக்கலாம். 1 கொரிந்தியர் 10:33 – “நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்.” பொதுவாக உலகத்திலுள்ள ஜனத்தொகையை இரண்டாக பிரிப்பது நமக்கு வழக்கம். உதாரணமாக ஆண்கள் மற்றும் பெண்கள், படித்தவர்கள் மற்றும் படிக்காதவர்கள், பணக்காரர்கள் மற்றும் ஏழைகள், ஆள்பவர்கள் மற்றும் அடிமைகள் என்றெல்லாம் இரண்டாக பிரிப்பது வழக்கம். ஆனால் இங்கே ஆவியானவர் ஜனத்தை மூன்றாக பிரிக்கின்றார். 1 யூதர்கள், 2. புறஜாதிகள், 3. தேவனுடைய சபை என்று கூறப்பட்டுள்ளது. யூதர்கள் என்று பவுல் எழுதியுள்ளது இன்றைக்கு இஸ்ரவேலரைக் குறிக்கின்றது. புறஜாதிகள் என்று சொல்லப்பட்ட வார்த்தை ஒரு இழிவான வார்த்தை அல்ல, யூதரல்லாத பிறமக்கள், பிறதேசத்தார், புறம்பானவர்கள் என்பதாகும். அகநானூறு, புறநானூறு என்று சொல்லுகிறோமே, அதுபோல (அகம், புறம்). யூதரல்லாத அனைவரையும் புறஜாதியார் அல்லது உலகத்தார் என்று அழைக்கிறோம். இஸ்ரவேலராக இருக்க வேண்டும் அல்லது இஸ்ரவேல் அல்லாதவர்களாக இருக்க வேண்டும். ஆனால் இங்கே மூன்றாவதாக ஒரு கூட்டத்தாரை ஆவியானவர் கூறுகின்றார். அவர்கள் இஸ்ரவேலரும் அல்ல, புறஜாதியாரும் அல்ல, இருதிறத்தாரிலுமிருந்து தேவன் தனக்காக ஒரு கூட்டத்தை ஏற்படுத்தினாரே அவர்கள்தான். தேவன் இவர்களை இஸ்ரவேலிலிருந்தும், புறஜாதியாரிலுமிருந்து தனக்கென்று ஏற்படுத்திக்கொண்டார். இவர்களையே ஜீவனுள்ள தேவனுடைய சபை என்று கூறுகின்றோம். ஆகவே நாம் உண்மையாகவே உலக ஜனக்கூட்டத்தைக் குறித்து இவ்விதமான தெளிவை உடையவர்களாக இருக்க வேண்டும். 1. இஸ்ரவேலர்கள் 2. இஸ்ரவேல் அல்லாதவர்கள் 3. இஸ்ரவேலிலிருந்தும், இஸ்ரவேல் அல்லாதவர்களிலிருந்தும் தேவனுக்கென்று பிரித்தெடுத்து உருவாக்கப்பட்ட தேவனுடைய சபை.

இந்த மூன்று கூட்டத்தாரைக் குறித்தும் வேதத்திலே தனித்தனியாக தீர்க்கதரிசனங்கள் இருக்கின்றன. ஆகவே தீர்க்கதரிசனங்களைக் குறித்தும் தீர்க்கதரிசன நிறைவேறுதலைக் குறித்தும் நாம் கற்கும்போது இஸ்ரவேலரைக் குறித்ததான தீர்க்கதரிசனங்கள், இஸ்ரவேல் அல்லாதவர்களைக் குறித்ததான தீர்க்கதரிசனங்கள் மற்றும் இஸ்ரவேலிலிருந்தும் இஸ்ரவேல் அல்லாதவர்களிலிருந்தும் தமக்கென்று தேவன் உருவாக்கின தேவனுடைய

சபையைக் குறித்ததான தீர்க்கதரிசனங்கள் ஆகிய இவைகளை தனித்தனியாக படிக்க வேண்டும்.

இந்த மூன்று கூட்டத்தாரைக் குறித்ததான தீர்க்கதரிசனங்களை நாம் கற்றுக்கொள்ளும்போது ஏகமாக இந்த மூன்று கூட்டத்தாருடைய தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுகிற கடைசிகாலத்திலே நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்பதனை தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. இது உலகத்தின் கடைசி அத்தியாயம், இஸ்ரவேலின் கடைசி அத்தியாயம், தேவனுடைய சபையின் கடைசி அத்தியாயம் என்றே நாம் சொல்லவேண்டும்.

இஸ்ரவேலரின் கடைசி அத்தியாயத்தைத்தான் நாம் பாடமாக கற்றுவருகிறோம் "The Last Chapter of Israel". இந்த இஸ்ரவேலருடைய வரலாற்றை நாம் கவனிக்க வேண்டும். இன்றிலிருந்து ஏறத்தாழ 4000 ஆண்டுகளுக்கு முன்பாக, கி.மு.1921லே ஆபிரகாம் என்கிற தனிமனிதனிலே இஸ்ரவேலுடைய வரலாறு ஆரம்பமாகிறது.

ஆபிரகாமுக்கு அநேக பிள்ளைகள் உண்டு. அவருடைய மூத்த மகன் இஸ்மவேல் என்றழைக்கப்பட்டடான். இவன் ஆகார் மூலமாய் பிறந்தவன். சாராள் மூலமாக இரண்டாவது மகன் பிறக்கின்றான், அவன் ஈசாக்கு என்று அழைக்கப்படுகிறான். இஸ்மவேலிலிருந்து 12 பிரபுக்கள் தோன்றுகிறார்கள். அதைப்போலவே ஈசாக்கின் மகனாகிய யாக்கோபினிடத்திலிருந்து 12 கோத்திரப்பிதாக்கள் தோன்றுகிறார்கள். அன்றைக்கு அந்த இஸ்மவேல் ஈசாக்கை பரியாசம் பண்ணினான். இஸ்மவேலுக்கும், ஈசாக்குக்கும் இடையிலே அன்றைக்கு ஒரு பிரிவினை இருந்தது. இரண்டு பெண்களிடத்திலே பிறந்தார்கள். ஒன்று சாராளிடத்திலே மற்றொன்று சாராளின் அடிமைபெண்ணாகிய ஆகாரிடத்திலே. இஸ்மவேலுக்கும், ஈசாக்குக்கும் வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டன. இஸ்மவேலும், அவனுடைய சந்ததிகளும் ஆபிரகாமின் சந்ததியாக இருந்தாலும், இவர்களெல்லாரும் விக்கிரக ஆராதனைக்காரர்களாக மாறினார்கள். இவர்கள் தங்களுடைய பிந்தைய நாட்களில் ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணப்பட்ட கானான் தேசத்தின் பெரும்பகுதியை இவர்கள் ஆக்கிரமிக்கின்றனர். ஒரு சிறிய பகுதியில்தான் இஸ்ரவேலர்கள் இருக்கின்றார்கள்.

கிறிஸ்துவுக்கு பின் கிட்டதட்ட ஏழாம் நூற்றாண்டிலே இந்த இஸ்மவேலர்கள் அதிகமாக முகமதிய (இஸ்லாம்) மதத்தை பின்பற்ற ஆரம்பிக்கின்றனர். இதற்கு ஒரு காரணம் முகமதுநபி என்பவர் இஸ்மவேல் ஜாதியை சேர்ந்தவர். இஸ்மவேலர்கள் முகமதியாரைப் பின்பற்றுகிறார்கள். இவர்கள் பிறப்பிலே இஸ்லாமியர்கள் அல்ல.

இஸ்லாம் என்பது கிறிஸ்துவுக்கு 600 ஆண்டுகளுக்கு பின்வந்ததுதான். இவைகளுக்கு முன்பாக இவர்கள் விக்கிரக ஆராதனைக்காரர்கள். இஸ்ரவேலர் விக்கிரக ஆராதனைக்காரர்கள் அல்ல. ஆபிரகாமுடைய பிள்ளைகள் ஈசாக்கு, இஸ்மவேல் இவர்களுக்கிடையிலான சண்டையிலே தொடர்கிறது சகோதர யுத்தம்.

இஸ்ரவேலுடைய வரலாற்றை பார்ப்போமானால் ஆபிரகாம், இவருடைய குமாரன் ஈசாக்கு, ஈசாக்கின் குமாரன் யாக்கோபு. யாக்கோபுக்கு 12 பிள்ளைகள். 12 பிள்ளைகளிலே யோசேப்பு எகிப்துக்கு கொண்டுபோகப்படுகின்றான். யோசேப்பினுடைய நாட்களிலே கோத்திர பிதாக்கள் எகிப்துக்கு போகின்றார்கள். எகிப்திலே அடிமைகளாகின்றனர். தேவன் குறித்த காலம் வரும்போது, யோசேப்பினுடைய மகனாகிய லேவியின் கோத்திரத்திலே வந்த மேசே தலைமைத்துவ பொறுப்புக்கு வருகிறார். மோசேயின்கீழ் எகிப்திலே அடிமைகளாயிருந்த கிட்டத்தட்ட 30 இலட்சம் பேர் எகிப்தைவிட்டு புறப்பட்டு தங்கள் சுயதேசம் தேடி வருகிறார்கள். இது தேவனுடைய வல்லமையான செயல்களினாலே நடைபெறுகிறது. இந்த மோசே மரித்துப் போகிறார். மோசேக்கு பின்பு யோசுவா. யோசுவாவினுடைய நாட்களிலே தேவன் அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஒரு தேசத்தைத் தருகிறார். ஆபிரகாமுடைய நாட்களுக்கு பிறகு யோசுவாவினுடைய நாட்களில்தான் இஸ்ரவேலருக்கென்று ஒரு தேசம் வருகின்றது. அதுவரைக்கும் இஸ்ரவேலருக்கென்று ஒரு தேசம் கிடையாது.

இஸ்ரவேலரை ஆளும்படி தேவன் இஸ்ரவேலின் தேசத்திலே நியாயாதிபதிகளை வைத்தார். கிதியோன், சிம்சோன் போன்ற நியாயாதிபதிகள் இஸ்ரவேலரை ஆண்டுவந்தார்கள். இந்த நாட்களில் இஸ்ரவேலருக்கு மற்ற தேசத்தாரைப்போல ராஜா கிடையாது. தேவன் தான் சொல்லியிருந்தபடியே இஸ்ரவேலருக்கு ராஜாவாக இருந்தார். ஆனால் மற்ற தேசத்திலெல்லாம் இராஜாக்கள் இருக்கின்றதை இஸ்ரவேலர்கள் பார்த்து, தங்களுக்கும் மற்ற தேசத்தாரைப் போலவே இராஜா வேண்டும் என்று கேட்டார்கள்.

இஸ்ரவேலருடைய சமஸ்த இராஜ்ஜியத்துக்கும் (United Kingdom) சவுல் முதல் இராஜாவாக வருகிறார் பின்பு சிறிதுகாலம் அவருடைய மகன் யோனத்தான். இவர்களைத் தொடர்ந்து தாவீது, பின்பு சாலொமோன். சாலொமோனின் நாட்களிலே இஸ்ரவேல் தேசம் மிகவும் பரந்து விரிந்த செழிப்பான தேசமாக, ராஜ்யமாக இருந்தது.

இஸ்ரவேல் வரலாற்றிலே மிக முக்கியமான ஒரு காலகட்டம், ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முன்பாக, ஆபிரகாமின் காலத்திலிருந்து 1000 ஆண்டுகள் கடந்து, இஸ்ரவேலர்களுக்குள்ளே மற்றொரு சகோதர யுத்தம் வருகிறது. இந்த சகோதர யுத்தத்தைக் குறித்து அநேக இலக்கியங்கள் உண்டு. ‘‘மகாபாரதம்’’ என்று சொல்லப்படுகிறதுகூட பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் இடையேயான சகோதரயுத்தம் தான். இங்கே இஸ்ரவேல் வரலாற்றிலே, சாலொமோனுடைய குமாரன் ரெகொபேயாம் காலத்திலே இஸ்ரவேல் இரண்டாக உடைந்து, 10 கோத்திரங்கள் இஸ்ரவேல் என்றும், 2 கோத்திரங்கள் யூதா என்றும் அழைக்கப்பட்டது. ஆகவே மூன்று பெரிய இராஜாக்கள்தான், சவுல், தாவீது மற்றும் சாலொமோன். இந்த பெரிய இராஜாக்களுக்கு பிறகு ராஜ்யபாரம் உடைந்துபோயிற்று. கிட்டதட்ட 200 ஆண்டுகள் கழித்து இஸ்ரவேல் கொஞ்சம் கொஞ்சமாக வீழ ஆரம்பித்தது. ஆகாப் இராஜாவினுடைய காலத்தில் பயங்கரமாக விக்கிரக ஆராதனை காணப்பட்டது. கடைசியாக இஸ்ரவேலிலே ஓசியா ஆட்சி செய்யும்போது, யூதாவிலே எசேக்கியா ஆட்சி செய்யும்போது, ஏசாயா தீர்க்கதரிசி காலத்திலே, இஸ்ரவேலின் 10 கோத்திரங்களும் அசீரியர்களின் சிறையிருப்புக்கு போய்விட்டது. இதற்குபிற்பாடு அவர்களைக் குறித்து குறிப்பான வரலாறு கிடையாது. பொதுவாக சிறைபிடித்துக்கொண்டுபோகும்போது, குருடர்கள், ஏழைகள், வயதானவர்கள், நோய்பிடித்தவர்கள், முடமாய் இருக்கிறவர்கள் இவர்களையெல்லாம் சிறைபிடித்துக்கொண்டுபோகமாட்டார்கள். ஏனென்றால் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாத இவர்களுக்கு சும்மா சாப்பாடு கொடுக்க சிறைபிடிப்பவர்கள் தயாராக இல்லை. இப்படிப்பட்டவர்களையெல்லாம் அங்கேயே விட்டுவிட்டு போய்விடுவார்கள்.

அந்நாட்களிலே இஸ்ரவேலருடைய தலைநகர் சமாரியாவாக இருந்தது. அசீரியர்கள் இஸ்ரவேலரை சிறைபிடித்துக்கொண்டு போகும்போது, அசீரியர் யாரை வேண்டாம் என்று விட்டு விட்டுப் போனார்களோ அவர்கள்தான் பின்நாட்களிலே ‘‘சமாரியர்கள்’’ என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள்

இஸ்ரவேலிலே ஒரு பகுதியினர் ஆவர். தெளிவாக சொல்லவேண்டுமானால் பிச்சை எடுக்கிறவர்கள், குருடர்கள், முடமாய் இருக்கிறவர்கள், வயதானவர்கள், ஒன்றுக்கும் உதவாதவர்கள் ஆகிய இவர்கள் அங்கே சமாரியாவிலே உள்ள ஜனங்களோடு கலந்து, உலகத்தோடு ஒன்றாக கலந்து ஒரு சமுதாயம் உருவாகிறது. இப்படி உருவான இந்த சமுதாயத்தைத்தான் நாம் ‘‘சமாரியர்கள்’’ என்று சொல்லுகிறோம். ஏனென்றால் சமாரியா அவர்களுடைய தலைநகராக இருந்தது.

இந்நாட்களிலே யூதாவும் தேவனுக்கு விரோதமான காரியங்களிலே இடைபட ஆரம்பித்தது. இஸ்ரவேலரின் சிறையிருப்பிலிருந்து ஏறத்தாழ 100 முதல் 150 ஆண்டுகள் கழித்து யூதா நேபுகாத்நேச்சாருடைய நாட்களிலே பாபிலோனுக்கு சிறைப்பட்டு போகிறது. நேபுகாத்நேச்சாருடைய முதலாம் படையெடுப்பிலே, தானியேல், சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்நேகோ ஆகியோர் சிறைபட்டு போகிறார்கள். நேபுகாத்நேச்சார் அரசனாகிய தன்னுடைய மூன்றாவது படையெடுப்பிலேதான் எருசலேமின் தேவாலயத்தைச் சுட்டெரிக்கிறான். எருசலேமிலிருந்த எல்லோரையும் சிறைபிடித்துக்கொண்டு போகிறான்.

பாபிலோனிய ஆட்சி முடிந்து, மேதியா, பெர்சியா ஆட்சி கோரேஸினுடைய நாட்களிலே வருகிறது. தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக 70 ஆண்டுகளுக்கு பிற்பாடு யூதர்கள் (யூத தேசத்தைச் சார்ந்தவர்கள்) கோரேஸினுடைய நாட்களில் தங்கள் தேசத்துக்கு மீண்டுமாக திரும்பி வருகிறார்கள்.

யூதா என்று சொல்லுவது யூதா, பென்யமீன் இனத்தைச் சார்ந்தவர்கள். 70 ஆண்டுகள் சிறையிருப்புக்கு பின்பு திரும்பிவருகிறபோதுதான் இவர்களுக்கு ‘‘யூதர்கள்’’ என்கிற பெயர் கொடுக்கப்பட்டது. இதற்குமுன்பு இவர்களுக்கு யூதர்கள் என்கிற பெயர் கிடையாது. தேவாலயம் கிடையாது. ஆகவே ஜெப ஆலயங்கள் உண்டாக்கி ஜெபிக்க ஆரம்பித்தார்கள். இப்படிப்பட்ட காலகட்டத்தில்தான் பரிசேயர், சதுசேயர், வேதபாரகர் என்ற கூட்டததாரெல்லாம் உருவாகினர். செருபாபேல் தலைமையிலே அவர்கள் திரும்ப வந்து தங்களுக்கு ஒரு தேவாலயத்தைக் கட்டுகிறார்கள். இன்னும் இந்த மேதியா, பெர்சியா ஆட்சிகாலத்திலேயே, நெகேமியா தலைமையில் எருசலேமைச் சுற்றிலும் அலங்கம் கட்டப்படுகிறது.

மேதியா, பெர்சியா அரசாட்சிக்கு கீழே இஸ்ரவேலர் அடிமைப்பட்டிருந்தாலும் இஸ்ரவேலருக்கென்று ஒரு சுயாதீனம் இருந்தது. இஸ்ரவேலர் கப்பங்கட்டிக்கொண்டிருந்தார்கள்.

பாபிலோனைத் தொடர்ந்து, மேதியா, பெர்சியா ஆட்சி, இதனைத் தொடர்ந்து கிரேக்க ஆட்சி. கிரேக்க ஆட்சியின் நாட்களிலே இஸ்ரவேலருக்கு கொஞம்சம் விடுதலை கிடைக்கிறது. மீண்டுமாக ரோமர்களின் ஆட்சி காலத்திலே இஸ்ரவேலர்கள் ரோமர்களுக்கு அடிமைகளாக இருக்கின்றனர். இஸ்ரவேலர் தங்களுடைய தேசத்துக்கு திரும்பி வந்தவர்களாகத்தான் இந்த பெர்சியா, கிரேக்கு மற்றும் ரோம் அரசுகளுக்கு கப்பங்கட்டிக் கொண்டிருந்தார்கள்.

இந்நாட்களிலேதான் நாசரேத்திலுள்ள மரியாளுக்கு ‘‘இயேசு பாலகன்’’ பிறக்கிறார். 33 ½ வயதிலே அந்த இயேசு சிலுவையிலே அறையப்படுகிறார். இது ஏறத்தாழ கிறிஸ்துவுக்கு பின் 30ல் நடைபெறுகிறது. இப்பொழுது இந்த யூத மார்க்கத்துக்குள்ளாகவே கிறிஸ்துவை பின்பற்றுகிற ஒரு பிரிவினர் உருவாக ஆரம்பித்தனர்.

இயேசுகிறிஸ்து மரித்து, உயிர்த்தெழுந்து, பரமேறினதற்கு பிற்பாடு 30 முதல் 36 வரையிலான ஆண்டுகளுக்குள்ளாக அதாவது கிறிஸ்துவுக்கு பின் 66ல் ஒரு பெரிய கிளர்ச்சி உண்டாகிறது. ரோம அடிமைத்தனத்தை முறியடிக்க வேண்டும் என்பதற்காகவே. இந்த சமயத்தில் ரோமில் இராஜாவாக இருந்தவர் ‘‘வெஸ்பேஷியன்’’. இவரது மகன் ‘‘தீத்து’’ யூதர்களுக்கு விரோதமாக வந்து, ஆயிரக்கணக்கான யூதர்களை சிலுவையிலே கொன்று, சிலுவையின் எண்ணிக்கை போதுமானதாக இராததினாலே யூதர்களின்மேல் யானைப் படையை ஓடவிட்டு, யூதர்களை நசுக்கிக் கொன்றான். எந்த வீதிகளிலே இயேசுகிறிஸ்துவின் இரத்தத்துளிகள் விழுந்தனவோ, அதே வீதியிலே யூதர்களின் இரத்தம் ஆறாக ஓடியது. ஜோசபஸ் என்ற வரலாற்று ஆசிரியர் இவ்வாறு எழுதுகிறார்: இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையும்போது அதைக் கண்ணாரக் கண்டவர்கள், தங்களுடைய பிள்ளைகள் சிலுவையில் அறையப்படுவதைப் பார்த்திருக்கிறார்கள். அன்றைக்கு இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையும்போது, இந்த இரத்தபழி எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள் மேலும் இருக்கட்டும் என்று சொன்னார்கள். நாற்பது ஆண்டுகளுக்குள்ளாக, அந்த இரத்தபழி அவர்களுடைய பிள்ளைகள் மேல்

வந்தது. யூத கணக்கின்படி ஒரு சந்ததி என்று சொன்னால் 40 ஆண்டுகள் என்பதாகும். முப்பதிலே இயேசு மரித்தார். எழுபதிலே எருசலேம் தேவாலயம் இரண்டாவது முறையாக தரைமட்டமாக இடிக்கப்பட்டது. யூதர்கள் உலகமெங்கிலும் சிதறடிக்கப்பட்டார்கள். முதலாவது தேவாலயம் சாலொமோன் கட்டினது, இரண்டாவது தேவாலயம் செருபாபேலுடைய நாட்களில் கட்டப்பட்டது. முதலாவது தேவாலயம் நேபுகாத்நேச்சாருடைய நாட்களிலே இடிக்கப்பட்டது. இவைகள் எல்லாவற்றிற்கும் தீர்க்கதரிசனங்கள் இருக்கிறது. முதலாவது சிறையிருப்பு யூதர்கள் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். இப்பொழுதான் தேவாலயம் முதலாவதக இடிக்கப்பட்டது. இரண்டாவது முறை தேவாலயம் இடிக்கப்படும்போது யூதர்கள் சிறையிருப்புக்கு கொண்டுபோகப்படவில்லை. மாறாக உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டார்கள். உலகத்தின் எல்லா திசைகளிலும் சிதறடிக்கப்பட்டார்கள்.

பாபிலோன் என்கிறதான குறிப்பிட்ட ஒரு தேசத்திற்கு சிறையாக போகவில்லை, தளபதி தீத்துவும் யூதர்களை அடிமைகளாக பிடித்துக்கொண்டு போகவில்லை. இலட்சக்கணக்கான யூதர்கள் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டுப்போனார்கள். இதற்குப் பிற்பாடு கிட்டதட்ட 1000 ஆண்டுகள் கழிந்துபோயின. கி.பி.1095லிருந்து 1291 வரைக்கும் கிறிஸ்தவர்கள், குறிப்பாக ரோமன் கத்தோலிக்கத்தைச் சேர்ந்தவர்களுக்குள் வணிகம் சம்பந்தமான போட்டி நிலவியது. ரோம் நாடு முழுவதும் கிறிஸ்தவ நாடாக மாறிவிட்டது. கிறிஸ்துவைக்கொன்று, இந்த யூதர்களை அழிக்கவேண்டுமென்று ரோம் கிறிஸ்தவர்கள் ஒரு படைமுயற்சியாகக் உலகமெங்கிலுமிருக்கிற யூதர்களை அழிக்க முயற்சி செய்தார்கள். உலகமெங்கிலுமுள்ள குறிப்பாக ஐரோப்பியா நாடு முழுவதிலுமுள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்களாலே யூதர்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள்.

நான்கு இரத்த நிலாக்களைப் பற்றி சொல்லும்போது இந்த 1492 முக்கியத்துவம் வாய்ந்த வருஷம். 1492ல் ஸ்பெயின் தேசத்திலே யூதர்களே இருக்க கூடாது என்று கொன்று குவித்ததோடு, கட்டளை பிறப்பித்து தங்கள் தேசத்தைவிட்டு யூதர்களை அனுப்ப ஆரம்பித்தார்கள். அமெரிக்கா என்பதுதான் இன்றைக்கான ஸ்பெயினுடைய விரிவாக்கம். ஸ்பெயின் செய்தது என்று சொன்னால் அதை அமெரிக்கா செய்தது என்று சொல்லலாம். ஸ்பெயின் இவ்விதமாக செய்ய ஆரம்பித்தவுடனே அன்றைக்குள்ள அனைத்து ஐரோப்பா நாடுகளும் யூதர்களை சட்டப்படி தங்கள் தேசத்தை விட்டு போய்விடவேண்டும்

என்று விரட்டினார்கள். இந்த சமயங்களில் பாலஸ்தீனம் துருக்கியர்கள் வசம் இருந்தது. ‘‘ஆட்டமன்’’ என்ற துருக்கிய மன்னன் கி.பி.1492லே யூதர்களுக்கு தனி கப்பல்களை அனுப்பி உலகமெங்கும் சிதறடிக்கப்பட்ட யூதர்களை, வாருங்கள் என்று அழைத்து, தங்கள் தேசத்தில் தங்கிக்கொள்ள இடம்கொடுத்தார். யூதர்களுக்கு பாலஸ்தீனத்திலே முதலாவது இடம் கொடுத்தவர்கள் துருக்கியர்கள். ஏனென்றால், பாலஸ்தீனம் பாழான நிலமாக இருந்தது. இங்கே ஒன்றுமே பயிரிட முடியாது. அங்கே வாழவே முடியாது. பலவிதமான விஷ ஜந்துக்கள் நிறைந்திருந்தது. உங்களால் இங்கே இருக்க முடியுமானால் இங்கே இருந்து கொள்ளலாம் என்று பாலஸ்தீனத்தை கைவசம் வைத்திருந்த துருக்கிய மன்னர் ஆட்டமன் அவர்களுக்கு ஒரு அழைப்பைக் கொடுக்கிறார். இப்படியாகத்தான் உலகமெங்கும் சிதறியிருந்த யூதர்கள் பாலஸ்தீனத்திற்கு திரும்பிவர ஆரம்பித்தார்கள். 19ம் நூற்றாண்டு, 1861ல் சீயோன் சொசைட்டி என்கிறதான ஒரு சொசைட்டி தொடங்கப்பட்டது. ஏதோ நாங்கள் பாலஸ்தீனத்தை அண்டிக்கொண்டிருக்கின்றோம் என்று அல்லாமல் உலகமெங்கும் சிதறியிருக்கிற யூதர்களுக்கென்று ஒது தனிநாடு வேண்டும் என்கிறதான முழக்கம் இந்த சொசைட்டி மூலமாக எழும்ப ஆரம்பித்தது. இந்த சமயத்தில் பியோடர் ஹெர்சல் என்ற அவர்களுடைய தலைவர் ‘‘யூதமனிதன்’’ என்கிறதான ஒரு புத்தகத்தை எழுதினார். உலகமெங்கும் சிதறியிருந்த யூதர்கள் மத்தியிலே ஒரு பெரிய கிளர்ச்சியை இப்புத்தகம் உருவாக்கியது. 1917ல் துருக்கியர் வசம் இருந்த பாலஸ்தீனம் ஆங்கிலேயர் வசம் சென்றுவிட்டது.

1917ம் ஆண்டு நவம்பர் 2ம்தேதி பால்பர் என்ற அமைச்சர் இங்கிலாந்து பாராளுமன்றத்திலே ஒரு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தார், அதிலே, இந்த பாலஸ்தீனத்தை இரண்டாக பிரித்து இந்த யூதர்களுக்கு தனியொரு குடியுரிமை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார். இதற்கு, துருக்கி நாட்டை பிடித்துக்கொண்டு அதை யூதர்களுக்கு கொடுப்பேன் என்று நீ எப்படி சொல்லலாம் என்று உலகளாவிய அளவிலே எதிர்ப்பு வலுத்தது. ஆனாலும் 30 ஆண்டுகளுக்குள்ளாக பாலஸ்தீனத்தை பிரித்து அதிலே யூதர்களுக்கு ஒரு பகுதியை கொடுக்கலாம் என்கிற பிரகடணம் ஐக்கிய நாடுகளின் சபையிலே நிறைவேற்றப்பட்டது.

1947ம் ஆண்டு 11ம் மாதம் (நவம்பர்) 29ம் தேதி 11ம் மணி வேளையிலே 11 நிமிஷத்திலே இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது (Eleventh Month, Eleventh

Hour, Eleventh Minutes) – பின்பு யார் அதை பிரித்துக்கொடுப்பது என்கிற வாதம் உண்டாயிற்று. இங்கிலாந்து பிரித்துக்கொடுத்தால் எண்ணெய் வழங்கிக்கொண்டிருக்கிற முகமதிய நாடுகளோடு எதிர்ப்பு ஏற்பட்டுவிடும். பிரித்துக்கொடுக்கலாம் என்ற தீர்மானம் வந்தும் யார் பிரித்து கொடுப்பது என்பதிலே குழப்பம் நிலவிக்கொண்டிருந்தது. இப்படிப்பட்டதான சூழ்நிலையில் 1948ம் ஆண்டு மே மாதம் 14ம் தேதி இஸ்ரவேல் தன்னை தனிநாடாக பிரகடணப்படுத்தியது. அன்றைக்கு அவர்கள் தங்கள் நாட்டிற்கு வைக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்த பெயர் (The Kingdom of David). ''தாவிதினுடைய அரசு'' என்று. உலகத்தார் அனைவரும் இவர்களை யூதர்கள் என்றே அழைத்தார்கள். ஆனால் அன்றைக்கு தீர்க்கதரிசன நிறைவேறுதலாக யாருமே எதிர்பாராத விதமாக அவர்கள் தங்கள் நாட்டிற்கு ''இஸ்ரவேல்'' என்று பெயர் வைத்தார்கள். ''யூதா'' என்றுதான் பெயர்வைக்க இருந்தார்கள். தாவீது அரசு என்றுதான் பெயர்வைக்க இருந்தார்கள். ஆனாலும் சற்றேனும் எதிர்பாராத விதமாக ''இஸ்ரவேல்'' என்று பெயர் வைத்தார்கள். இவர்கள் அனைவரும் யூதர்கள்தான். (தென்திசை ராஜ்யமாகிய யூதா ராஜ்ஜியம்). பிரிந்துபோன 10 கோத்திரத்தாராகிய அவர்களுடைய நிலையைப் பற்றியதான காரியங்கள் இந்த சூழ்நிலையில் அறியப்படாததாகவே இருந்தது. ஆகவே முழுக்க முழுக்க அது யூதர்கள் நிறைந்த நாடு. மற்றவர்கள் அனைவரும் யூதர்களுக்கான நாடு என்றுதான் சொன்னார்கள். ஆனால் 1948ம் ஆண்டு மே மாதம் 14ம் தேதி தேவனுடைய பெரிய தீர்க்கதரிசனம் நிறைவேறும்படிக்கு அதற்கு இஸ்ரவேல் என்கிறதான பெயர் வந்தது. இந்த தீர்க்கதரிசனத்தையும், அதின் நிறைவேறுதலையும் வேத வசனத்தின் அடிப்படையில் நாம் அறிந்துகொள்வது நமக்கு மிகுந்த பிரயோஜனமாக இருக்கும்.

ஓசியா 1:11 - அப்பொழுது யூதா புத்திரரும் இஸ்ரவேல் புத்திரரும் ஏகமாய்க் கூட்டப்பட்டு, தங்களுக்கு ஒரே அதிபதியை ஏற்படுத்தி, தேசத்திலிருந்து புறப்பட்டு வருவார்கள்; யெஸ்ரயேலின் நாள் பெரிதாயிருக்கும். 'அப்பொழுது'' என்று ஒரு காலத்தைக் குறித்து சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் ஒன்றாக கூட்டப்படுவார்கள் என்று கூறுகிறார். இது கிறிஸ்துவுக்கு முன் கிட்டத்தட்ட 800 ஆண்டுகளுக்கு முன்பாக கூறப்பட்ட தீர்க்கதரிசனம். 1948 என்று சொன்னால் ஏறத்தாழ ஒரு 2000 ஆண்டுகள் கழித்து அந்த தீர்க்கதரிசனம் மே மாதம் 14ம் தேதி நிறைவேறுகிறது. அன்றைக்குதானே அது நிறைவேற தொடங்குகிறது.

சாலொமோனின் மகனாகிய ரெகொபெயாமுடைய காலத்திலே கிட்டத்தட்ட 3000 ஆண்டுகளுக்கு முன்பாக பிரிந்த இந்த இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் கூட்டப்பட்டார்கள். ''தங்களுக்கு ஒரே அதிபதியை ஏற்படுத்தி'' என்று வாசிக்கின்றோம். சாலொமோனுக்கு பிற்பாடு யூதாவுக்கு தனியாக இஸ்ரவேலுக்கு தனியாக என்று சொல்லி இரண்டு அதிபதிகள் காணப்பட்டார்கள். அசீரியர் சிறைபிடித்துக்கொண்டு போகிறவரைக்கும்கூட இதே நிலைதான். பின்பு யூதா கோத்திரம் மட்டும் இருந்தது. அவர்களுக்கு ஒரு அதிபதி. அவர்கள் யூதர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள். இந்த யூதர்கள்தான் தங்களுக்கான தனிநாட்டிற்காக போராடினார்கள். அவர்களுக்குத்தான் இப்பொழுது அந்த நாடும் கிடைத்திருக்கிறது. ஆனால் இங்கே தீர்க்கதரிசனத்தைப் பார்க்கின்றோம். அவர்கள் தங்களுக்கு ஒரே அதிபதியை ஏற்படுத்திக் கொள்வார்கள் என்று. ''தேசத்திலிருந்து புறப்பட்டு வருவார்கள், யெஸ்ரயேலின் நாள் பெரிதாயிருக்கும்'' என்று அந்த தீர்க்கதரிசனத்தின்தொடர்ச்சியை நாம் பார்க்கின்றோம். ''யெஸ்ரயேல்'' என்பது இஸ்ரவேலின் செல்லப் பெயர். யூதர்கள் போராடி நாட்டை பெற்றுக்கொண்டாலும் யூதர்கள் என்கிற பெயர் வரவில்லை. ஆனால் இரண்டுபேரும் சேர்ந்து ''இஸ்ரவேல்'' என்கிற பெயரிலே வருகிறார்கள். இங்கே தீர்க்கதரிசன நிறைவேறுதலைப் பார்க்கின்றோம்.

எசேக்கியேல் 37:22 - அவர்களை இஸ்ரவேலின் மலைகளாகிய தேசத்திலே ஒரே ஜாதியாக்குவேன்; ஒரே ராஜா அவர்கள் எல்லாருக்கும் ராஜாவாக இருப்பார்; அவர்கள் இனி இரண்டு ஜாதிகளாக இருப்பதில்லை; அவர்கள் இனி இரண்டு ராஜ்யங்களாகப் பிரிவதுமில்லை. யூதர்களையும், இஸ்ரவேலரையும் ஒரே ஜாதியாக்குவேன். யூதர்கள், இஸ்ரவேலர்கள் என்று இரண்டு ஜாதிகளாக இவர்கள் இருப்பதில்லை. யூதர்களுக்கும், இஸ்ரவேலருக்கும் ஒரே இராஜாதான் இருப்பார். தனித்தனியாக இராஜாக்கள் இனி இருக்கப்போவதில்லை.

எசேக்கியேல் இந்த தீர்க்கதரிசனத்தைக் கூறும்போது இஸ்ரவேலின் 10 கோத்திரங்களைக் குறித்த காரியங்கள் ஒன்றுமே அறிவுக்கு எட்டாததாகவே இருந்தது. ஆனால் இனி இரண்டு ஜாதிகளாக இருப்பதில்லை, இரண்டு ராஜ்யங்களாக பிரிவதுமில்லை என்று பாபிலோனிய சிறையிருப்பில் இருக்கும்போது எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைக்கிறார்.

இஸ்ரவேலருக்கும், யூதருக்கும் இடையே எத்தனை யுத்தங்கள் நடைபெற்றிருந்தாலும் எசேக்கியேல் தீர்க்கதரிசனமாக கூறுகிறார். குறிப்பிட்ட

காலம் ஒன்று வருகிறது. அப்பொழுது கண்டிப்பாக இஸ்ரவேலரும், யூதர்களும் ஒன்றாக சேருவார்கள், அவர்கள் ஒரே ஜாதியாக இருப்பார்கள். அவர்களுக்கு ஒரே இராஜா இருப்பார். அவர்கள் இனி இரண்டு இராஜ்ஜியமாக பிரிந்திருப்பதில்லை என்று. ஓசியாவிலே வாசித்தோம், இங்கே எசேக்கியாவின் தீர்க்கதரிசனத்தைப் பார்க்கிறோம். நமக்கு எவ்வளவு ஆச்சரியமாக இருக்கின்றது. இன்னுமொரு மிக முக்கியமான தீர்க்கத்தரிசன பகுதியை நாம் கவனிப்போம்.

ஏசாயா 11:10-16 – ‘‘அக்காலத்திலே, ஜனங்களுக்குக் கொடியாக நிற்கும் ஈசாயின் வேருக்காக ஜாதிகள் விசாரித்துக் கேட்பார்கள்; அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும். அக்காலத்திலே, ஆண்டவர் அசீரியாவிலும், எகிப்திலும், பத்ரோசிலும், எத்தியோப்பியாவிலும், பெர்சியாவிலும், சிநேயாரிலும், ஆமாத்திலும், சமுத்திரத் தீவுகளிலும், தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக்கொள்ளத் திரும்ப இரண்டாம்விசை தமது கரத்தை நீட்டி, ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரவேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார். எப்பிராயீமின் பொறாமை நீங்கும், யூதாவின் சத்துருக்கள் சங்கரிக்கப்படுவார்கள்; எப்பிராயீம் யூதாவின்மேல் பொறாமையாயிரான், யூதா எப்பிராயீமைத் துன்பப்படுத்தான். அவர்கள் இருவரும் ஏகமாய்க்கூடி மேற்கேயிருக்கிற பெலிஸ்தருடைய எல்லைகளின்மேல் பாய்ந்து, கீழ்த்திசையாரைக் கொள்ளையிட்டு, ஏதோமின்மேலும் மோவாபின்மேலும் கைபோடுவார்கள்: அம்மோன் புத்திரர் அவர்களுக்குக் கீழ்ப்படிவார்கள். எகிப்தின் சமுத்திரமுனையைக் கர்த்தர் முற்றிலும் அழித்து, தம்முடைய காற்றின் வலுமையினால் நதியின்மேல் தமது கையை நீட்டி, ஏழாறுகளாகப் பிரித்து, ஜனங்கள் கால்நனையாமல் கடந்துபோகும்படி பண்ணுவார். இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டநாளில் அவர்களுக்கு இருந்ததுபோல, அசீரியாவிலே அவருடைய ஜனத்தில் மீதியானவர்களுக்கு ஒரு பெரும்பாதையிருக்கும்.’’ ஏசாயா இந்த தீர்க்கதரிசனத்தை சொல்லுகிறது எப்பொழுது தெரியுமா? இயேசுகிறிஸ்துவுக்கு கிட்டத்தட்ட சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பாக. முதலாவது சிறையிருப்பின்போது பாபிலோனுக்கு மட்டும்தான் போனார்கள். ஏசாயா தீர்க்கதரிசனம் கூறுகிறபோது யூதர்கள் சிறையிருப்புக்கே போகவில்லை. இந்த சமயத்தில் இஸ்ரவேல் மாத்திரம் சிறையிருப்புக்கு சென்றிருந்தார்கள். ஏசாயா இங்கே தெளிவாக சொல்லுகிறார், இரண்டாம் விசை பல பகுதிகளிலிருந்து

தமது ஜனங்களை வரவழைப்பார் என்று. நாம் அறிந்திருக்கின்றோம் முதலாம் விசை பாபிலோனிலிருந்து தமது ஜனத்தை வரவழைத்தார் என்று.

உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டிருக்கிற இஸ்ரவேலரைச் சேர்த்துக் கொள்ளுவேன். அசீரியரின் காலத்திலே சிறைபிடிக்கப்பட்டவர்களுக்கு என்ன நேரிட்டது என்பதே தெரியவில்லை. உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டிருப்பார்கள் என்று அறிந்துகொள்ள முடிகிறது. இந்தியாவில் அசாம் என்ற மாநிலத்தில் யூதர்கள் இருந்திருக்கிறார்கள். அதைப்போலவே மும்பை பட்டணத்திலே, கேரளாவிலே இருந்திருக்கிறார்கள். அதனால்தான் உலகமெங்கும் யூதர்கள் சிதறடிக்கப்பட்டிருந்ததை குறிக்கும் வண்ணம் பல தேசங்களின் பெயர்களை குறிப்பிட்டிருக்கிறார் ஏசாயா தீர்க்கதரிசி. இரண்டாம்விசை பூமியின் நான்கு திசைகளிலும் சிதறியிருக்கிற யூதர்களை தேவன் கூட்டிச் சேர்ப்பார் என்று வாசிக்கின்றோம். முதல்விசை பாபிலோனிலிருந்து யூதர்களை வரவழைக்கப்படுகிறதோ, இரண்டாம் விசை உலகமெங்கிலும் இருந்து யூதர்கள் வரவழைக்கப்படுகிறதோ ஏசாயாவுக்கு இந்த இரண்டு நிகழ்வுகளும் எதிர்காலங்களாகவே இருந்தது. 13ம் வசனத்தை நன்கு கவனியுங்கள். ‘‘எப்பிராயீமின் பொறாமை நீங்கும்’’ – எப்பிராயீம் என்றால் இஸ்ரவேலைக் குறிக்கிற சொல். யோசேப்பினுடைய மகனாகிய எப்பிராயீம். இஸ்ரவேலுக்குரிய பல பெயர்களில் ஒன்று எப்பிராயீம். எப்பிராயீமுக்கு யூதா மேலே ஒரு பொறாமை, சாலொமோனுடைய மகனாகிய ரெகொபெயாமின் நாட்களிலே ஆரம்பித்தது. இங்கே ஏசாயா கூறுகிறதென்ன? யுதாவின் மேலான எப்பிராயீமின் பொறாமை நீங்கும் என்று. தீர்க்கதரிசனம் கூறினதின்படியே கிட்டதட்ட 2600 ஆண்டுகளுக்கு பிற்பாடு அது அப்படியே நிறைவேறி இருக்கின்றது. ஒருவேளை நாம் அந்த காலத்துக்கு சற்று பிந்திவரவேண்டும். எத்தனை ஆண்டுகள் கழித்து என்று சொன்னால், கிட்டதட்ட 2600 ஆண்டுகள் கழிந்த பிறகுதான். எழுத்தின்படியே, எப்பிராயீமின் பொறாமை நீங்கும், யூதாவின் சத்துருக்கள் சங்கரிக்கப்படுவார்கள், எப்பிராயீம் யூதாவின்மேல் பொறாமை கொள்ளான், யூதா, எப்பிராயீமை துன்பப்படுத்தான். அவர்கள் இருவரும் ஏகமாய் கூடி, சாலொமோன் காலத்தில், ரெகொபெயாமின் காலத்தில் பிரிந்திருந்ததைப்போல, அதற்குப் பின்பு அவர்கள் கூடவே இல்லை. 2600 ஆண்டுகள் கழித்து 1948ம் ஆண்டு மே மாதம் 14ம் தேதி அவர்கள் இரண்டுபேரும் யூதாவும், இஸ்ரவேலம் ஒன்றாக கூடி, மேற்கேயிருக்கிற பெலிஸ்தியர்கள் மேல் பாய்ந்து (பெலிஸ்தியர்களின் தேசம் பாலஸ்தீனம் என்று சொல்கிறோம்) இவர்கள் இரண்டுபேரும் ஒன்றாகச் சேர்ந்து, மேற்கே இருக்கிற

பாலஸ்தீனியர்கள்மேல் பாய்ந்து, கீழ்த்திசையாரைக் கொள்ளையிட்டு, ஏதோமின்மேலும், மோவாபின்மேலும் கைபோடுவார்கள். ஜோர்டான் என்பது யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள மோவாப் தேசத்தார். ஜோர்டான் மேல் கைபோடுவார்கள், அம்மோன் புத்திரர் அவர்களுக்கு கீழ்படிவார்கள். இவர்கள் இஸ்ரவேலுக்கு அனுகூலமாக மாறுவார்கள். வரலாற்றிலே நாம் பார்க்கின்றபோது இப்பொழுது அவர்கள் மாறிக்கொண்டிருக்கிறார்கள்.

ஏறத்தாழ 2700 ஆண்டுகளுக்கு முன்பாக தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டவைகள் எவ்வளவு துல்லியமாக நம்முடைய காலத்திலே வரலாறாக மாறியிருக்கிறது. ஒரு குட்டி நாடு. ஒரு தீர்க்கதரிசனம் - என் குமாரத்தி ஒரே நாளிலே பிள்ளை பெற்றாள். ஒரே நாளில் அந்த தேசம் பிறந்து விட்டது. அவர்களே, தாங்களாகவே அறிவித்து விட்டார்கள். குட்டி நாடு. அன்றைக்கு அவர்களின் கைவசம் இருந்தது 3 ஜீப்கள்தான். அவர்களுக்கென்று பயிற்சிபெற்ற இராணுவம் கிடையாது, இராணுவ தளவாடங்கள் கிடையாது.

பிரியமானவர்களே, இவர்கள் தங்களை சுய தேசம் என்று பிரகடணப்படுத்தின அடுத்த நாளே அவர்களுக்கு விரோதமாக, அன்றைக்கு இருந்த ஐந்து (5) பெரிய நாடுகளான எகிப்து, ஈராக், சிரியா, லெபனான் மற்றும் ஜோர்டான் (யோர்தானுக்கு அப்பபுறத்திலுள்ளவர்கள்) யுத்தத்திற்கு வந்தார்கள். நேற்று பிறந்த நாடு. இராணுவம், இராணுவத்தளவாடங்கள் கிடையாது. எண்ணிக்கைக்குட்பட்ட ஜீப் மாத்திரமே இருந்தது. 2000 ஆண்டுகளாக உலகத்தின் பல நாடுகளில் ஒடுக்கப்பட்டவர்கள், நசுக்கப்பட்டவர்கள், உபத்திரவப்பட்டவர்கள், சுய தேசமின்றி அகதிகளாக பல நாடுகளிலே அலைந்தவர்கள். எகிப்தினுடைய பெலன், அமெரிக்காவின் பெலன்; ஈராக்குடைய பெலன், ரஷ்யாவின் பெலன். இன்னும் லெபனான், சிரியா, மற்றும் ஜோர்டான் போன்ற பெரிய நாடுகள் நேற்று பிறந்த இஸ்ரவேலுக்கு விரோதமாக ஒரே நாளில் யுத்தத்தை தொடுக்கிறார்கள்.

என்ன நடந்தது தெரியுமா? யூதாவுக்கு துணையாக யுத்தம் தொடங்குமுன் கர்த்தர் வருகிறார். ஆமென்!

## கேள்விகள்:

1. வேதத்தின்படியான மூன்று ஜனக்கூட்டங்களைப் பற்றி இப்பாடத்தில் கற்றுக்கொண்டவைகளைக் கூறுக?

2. இஸ்ரவேல் வரலாற்றிலே ஆபிரகாம் முதல் ரெகொபெயாம் வரை நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகளை வரிசைப்படுத்தி விளக்கமாக கூறுக?
3. இஸ்ரவேலர்கள் மற்றும் யூதர்கள் சிறைபிடித்துக் கொண்டு போகப்படுகிற நிகழ்வுகளைப் பற்றிக் கற்றுக்கொண்டவைகளை சற்று விளக்கமாக கூறுக?
4. முதல் மற்றும் இரண்டாம்விசை தேவாலயம் இடிக்கப்படுதல் பற்றியும் அப்பொழுது நடைபெற்ற நிகழ்வுகளைப் பற்றியும் குறிப்பிடுக.
5. பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து யூதர்கள் திரும்பி வந்த விதம் பற்றியும், உலகமெங்கும் சிதறடிக்கப்பட்ட நிலையிலிருந்து யூதர்கள் திரும்பி வந்த விதம் பற்றியும் சற்று விளக்கமாக கூறுக.
6. ''இஸ்ரவேல் தேசம்'' எவ்வாறு உருவானது என்பதனையும் அதற்கான வேதாகம தீர்க்கதரிசனங்கள் என்னென்ன என்பதனையும் விளக்கமாக கூறுக?